1973 மார்ச் 5]

(*b*) whether arrangements to survey these villages have been made; and

(*c*) the details thereof?

THE HON. THIRU P. U. SHANMUGAM: (*a*) to (*c*): There are two Chennasandiram Villages in Hosur taluk of Dharmapuri district. One Chennasandiram inam estate lies in between Hosur and Bagalur. It belongs to Marasandiram survey group. This estate was notified on 12th March 1965 and finally taken over by Government on 29th June 1972. In respect of this estate the High Court, Madras in their order, dated 21st July 1972 granted stay of operations under the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act 26 of 1963. Ryotwari settlement will be introduced in this estate after the High Court vacates the stay. The other Chennasandiram village (i.e.) Chennasandiram 'B' inam estate forms part of 177, Selavandoddi survey group. Ryotwari settlement was introduced in this village under the provisions of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 on 15th June 1972 and fair accounts have been handed over to the Revenue Department.

THIRU K. S. KOTHANDARAMIAH: I am referring only to Chennasandiram village that is lying between Hosur and Bagalur. That village has not been taken over and surveyed yet. So the people there are not able to get democratic facilities like loans for agricultural operations, etc. The inamdars are giving them lot of trouble. Will the Hon. Minister see to it that the village is taken over and survey conducted soon?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இதைப்பற்றி நீண்ட ஒரு சரித்திரமே இருக்கிறது. இந்த எஸ்டேட் குறித்து 1965 ஆம் ஆண்டு நாம் நோடிபிகேஷன் செய்திருக்கிறோம். அப்படி நோட்டிபிகேஷன் செய்ததற்குப் பிறகு உயர்நீதி மன்றத்திலே ரிட் மனு தாக்கல் செய்திருக்கிறார்கள். என்ன ஆயிற்று என்று தெரியாமலே இனாம்தார் நிலத்தை திருப்பிக் கொடுத்துவிட்டார்கள். அதற்குப் பிறகு இனாம்தார் செட்டில்மெண்ட் ஆபீஸரிடத்திலே அதை மைனர் இனாமாக அறிவிக்கவேண்டுமென்று மனுப்போட்டார்கள். அப்படி அறிவிக்கப்பட்டவுடனே அப்பீல் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. அதற்குப் பிறகு இந்தச் சட்டம் செயல்படுவதை உயர்நீதி மன்றம் தடை-

செய்தது. அவர்கள் உயர்நீதிமன்றத்திற்குச் சென்று தடை வாங்கியிருக்கிறார்கள். இது இன்ப்ரக்சுவஸ் ஆகாதா என்று நாம் அரசாங்க வக்கீலிடம் கேட்டோம். அவர்களும் இன்ப்ரக்சுவஸ் தான், இருந்தாலும் நடவடிக்கை எடுக்கவேண்டாம் என்று தகவல் தந்திருக்கிறார்கள். எனவே அந்தத் தடை நீங்குவதற்காகக் காத்திருக்கிறோம். அதற்குப் பிறகு தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவர் அவர்களே, இம்மாதிரி தாமதம் ஏற்படுவதாலே பஞ்சாயத்தினுடைய அபிவிருத்தி வேலைகள் செய்யப்பட முடியவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது எல்லோருக்கும் தெரிந்ததுதான். செட்டில்மெண்ட் நடந்தால்தான் எல்லாம் நடக்கும். நீதிமன்றத்திலே தடை வாங்கினால் நாம் ஒன்றும் செய்ய முடியாது.

திரு. த. சோனையா : இந்தச் செட்டில்மெண்ட் நடவடிக்கைகள் நீண்டு கொண்டே போகின்றன. சில கிராமங்களில் மிக கால தாமதம் ஏற்படுகிறது. இந்தப் பணி தமிழ்நாட்டிலே எப்பொழுது முடிவடையும் என்று அரசு அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படித் திட்டவட்டமாக அறிவிக்க இயலாது.

பொன்னேரி வட்டம்

* 243 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னைக்கு அருகே வடக்கில் இருக்கும் பொன்னேரி வட்டத்தைச் சென்னை மாவட்ட எல்லைக்குள் கொண்டு வரும் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பொன்னேரி வட்டத்தைச் சென்னை மாவட்டத்துடன் இணைக்கும் செயற்குறிப்பு அரசினிடம் தற்சமயம் இல்லை.

1973 மார்ச் 5]

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, பொன்னேரி வட்டத்திலே இருக்கிறவர்களும், கும்முடிப்பூண்டி துணை வட்டத்திலே இருக்கின்றவர்களும் செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகராகிய காஞ்சிபுரம் செல்ல வேண்டுமானால் 60 மைல் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. செங்கற்பட்டு மாவட்ட கலெக்டர் அவர்களால் இவைபற்றி முழுமையான கவனம் செலுத்த முடியவில்லை. ஆகவே அதை சென்னையோடு சேர்க்கவோ அல்லது தனிக் கோட்டமாக அமைக்கவோ அமைச்சர் அவர்கள் மாவட்ட சீரமைப்பு செய்கின்ற நோக்கில் கவனிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நிர்வாக சீர்திருத்தக் குழுவின் அறிக்கை இன்னும் கிடைக்கவில்லை. சென்னையோடு சைதாப்பேட்டை டிவிஷனை சேர்க்கலாமா என்று யோசனை இருக்கிறது.

ஓடக்காட்டுப்புதூர் உண்டுறைவிடப்பள்ளிக் கட்டடங்கள்

* 240 வினா—**திரு. மூ. மாரிமுத்து :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்படி, ஓடக்காட்டுப்புதூரில் உள்ள மலைவாழ் மாணவர்கள் உண்டுறைவிடப்பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது கட்டடங்கள் கட்டித் தரப்படும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) வேப்படி உண்டுறைவிடப்பள்ளி கட்டிடத்திற்கான திருத்திய ரூ. 36,800-க்கு மதிப்பீட்டை அரசின் ஒப்புதலுக்காக 22—1—1973-ல் அரிசன நல இயக்குநர் அனுப்பியுள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது. ஓடக்காட்டுபுதூர் உண்டுறைவிடப்பள்ளி—விடுதி கட்டிடத்திற்கு எற்கனவே அரசு ரூ. 40,000 நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

(இ) கூடிய விரைவில் கட்டித் தரப்படும்.

திரு. வி. பழனிவேல் : தலைவர் அவர்களே, இந்த ஓடக்காட்டுப் புதூர் மலை வாழ் மக்களுக்காகக் கட்டடம் கட்டுவதற்கு வேண்டிய செங்கல் கம்பி, சிமிண்ட் இவற்றையெல்லாம் கொண்டு செல்வதற்கு வண்டிப்பாதை அங்கே இல்லாமல் இருக்கிறது. எனவே முதலிலே அங்கே வண்டிப் பாதை அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அதுபற்றிப் பிரச்சினை இப்பொழுது இல்லை எப்படியும் கட்டடம் கட்டி முடிக்கப்படும்

குன்னூர் அரிசன நலப் பள்ளிக்கட்டடம்

* 241 வினா—**திரு. நா. வெ. குருசாமி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், குன்னூரில் 26—3—1972-ம் நாளன்று அரிசன நலப் பள்ளிக்கு அடிக்கல் நாட்டப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதில் யார் யார் கலந்து கொண்டார்கள்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) அவ்விழாவில் மத்திய அமைச்சர் திரு. சி. சுப்ரமணியம், மதுரை மாவட்ட ஆட்சியாளர், மதுரை மாவட்ட நல அதிகாரி, ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தலைவர், ஆணையர் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

வைகை அணைப் பகுதியில் மிருகக்காட்சி சாலை

* 246 வினா—**திரு. நா. வெ. குருசாமி :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வைகை அணைப் பகுதியில் மிருகக் காட்சிசாலை ஒன்றை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது முதல் ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.